©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 3.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 152A]

சென்னை, புதன்கிழமை, ஜூன் 24, 2009
ஆனி 10, திருவள்ளுவர் ஆண்டு — 2040

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

*பக்கங்கள்*

**சட்டமுன்வடிவுகள்:**

எண் 10/2009—தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் .. .. .. 2-3

எண் 11/2009—தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. 5-6

எண் 12/2009—தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. .. 7-8

**2009–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2009**

***1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்திய குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

110–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன் பின்பு இதில் முதன்மை சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 110–ஆம் பிரிவில், (g) எனும் கூறில், "அல்லது ஏரி" என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

112–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 112–ஆம் பிரிவில், (aa) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(aa) ஏரிகளை அகழ்தலும், பழுதுபார்த்தலும், பேணி வருதலும்; மற்றும் குடிப்பதற்கான, சலவை செய்வதற்கான, குளிப்பதற்கான நோக்கங்களுக்கென நீரை வழங்குவதற்கான, நீர் வழங்கு கட்டுமானங்களைக் கட்டுதலும்;".

## நோக்கக்—காரண விளக்கவுரை

1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 110—ஆம் பிரிவின் (g) எனும் கூறின்படி கிணறுகளைத் தோண்டுதல், அவற்றைப் பழுது பார்த்தல், குட்டைகளை அல்லது ஏரிகளை அகழ்தல், பழுது பார்த்தல், பேணி வருதல் மற்றும் குடிப்பதற்கான, சலவை செய்வதற்கான, குளிப்பதற்கான நோக்கங்களுக்கென நீரை வழங்குவதற்கான, நீர் வழங்கு கட்டுமானங்களைக் கட்டுதல் மற்றும் அவற்றைப் பேணி வருதல் ஆகிய பணிகளை நிறைவேற்றுவதற்கென நியாயமான ஏற்பாட்டு வகைமுறையைச் செய்யவேண்டியது ஊராட்சியின் கடமையாகும். அதுபோலவே, மேற்சொன்ன சட்டத்தின் 112—ஆம் பிரிவின் (aa) எனும் கூறானது, குடிப்பதற்கான, சலவை செய்வதற்கான, குளிப்பதற்கான நோக்கங்களுக்கென நீரை வழங்குவதற்கான நீர் வழங்கு கட்டுமானங்களைக் கட்டுவது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கடமையாக இருக்கும் என வகை செய்கிறது. ஆனால், நடைமுறையில், கிராமங்களில் உள்ள குட்டைகள் மட்டுமே ஊராட்சிகளால் பேணி வரப்படுகின்றன; ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களால் பேணி வரப்படுகின்றன. எனவே அவற்றுள் குட்டைகளை மட்டுமே பேணி வரும் கடமையை ஊராட்சிகளுக்கான கடமையாகச் செய்வதன் பொருட்டும், ஏரிகளைப் பேணி வருவது ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாக அதிகாரம் அளிப்பதற்காகவும், அரசானது, மேற்சொன்ன 21/1994 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 110 (g) எனும் பிரிவையும், 112 (aa) பிரிவையும் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2009**

***1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 21/1994.**

**37–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

2. 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 37–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவிற்குப் பின்னர், பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(2-A) 38–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின் (e) எனும் கூறின்படி உறுப்பினராக இருப்பதற்குத் தகுதியற்றவராக ஆக்கப்பட்ட நபரொருவர் அவ்வாறு தகுதியின்மை அடைந்த தேதியிலிருந்து ஆறு ஆண்டு கால அளவுக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.".

**நோக்கக்—காரண விளக்கவுரை**

பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களுக்குமான தேசிய ஆணையமானது, தனது ஏழாவது அறிக்கையில் பின்வருமாறு பரிந்துரை செய்துள்ளது:—

"நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவை, மாநகராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றைப் பொறுத்த அளவில், போலி சாதிச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களை உடனடியாகப் பதவிப் பொறுப்பிலிருந்து அல்லது பதவியிடத்திலிருந்து நீக்கம் செய்ய வேண்டும்; மற்றும் சட்டத்தின்படி வகை செய்யப்பட்டுள்ள தண்டனை வழங்கப்படுவதுடன் குறைந்தது 6 ஆண்டு காலம் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தடை செய்யப்படுதல் வேண்டும்.".

**2.** இந்திய அரசு, மேற்சொன்ன பரிந்துரையின் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. எனவே, அரசானது, பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்களுக்குமான தேசிய ஆணையத்தின் மேற்சொன்ன பரிந்துரைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், ஊராட்சிகளைப் பொறுத்த வரையில், 1994—ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 21/1994) திருத்துவதென முடிவு செய்துள்ளது.

**3.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2009.**

***1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்திய குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்தச் சட்டம், 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 21/1994.**

**12–ஆம் பிரிவிற்குப் பதிலாக அமைத்தல்.**

2. (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 12–ஆம் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"*12. கிராம ஊராட்சி ஒன்றினை சிற்றொகுதிகளாகப் பிரித்தல்.*—(1) கிராம ஊராட்சி ஒன்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்காக, ஆய்வாளரானவர், கிராம ஊராட்சியைக் கலந்தறிந்த பின்னர், அறிவிக்கையின் வாயிலாக, கிராம ஊராட்சியினை, வகுத்துரைக்கப்படக்கூடிய அளவுகோலுக்கு இணங்கிய வகையில் சிற்றொகுதிகளாகப் பிரிக்கலாம்;

(2) ஒவ்வொரு சிற்றொகுதியிலிருந்தும், ஓர் உறுப்பினர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.''.

**கிராம ஊராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தொடர்ந்து உறுப்பினர்களாக இருத்தல் மற்றும் தற்காலிக காலியிடங்கள் நிரப்பப்படுதல்.**

3. இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தில் என்ன அடங்கியுள்ளபோதிலும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு உடனடி முன்னதாக சிற்றொகுதிகளின் உறுப்பினர்களாக அவ்வாறு பதவி வகித்து வருகின்ற கிராம ஊராட்சிகளில் உள்ள சிற்றொகுதிகளின் உறுப்பினர்கள், அவர்தம் பதவிக்காலம் முடிவடைவது வரையிலும் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய உறுப்பினர்களின் பதவியில் ஏற்படும் காலியிடம் ஒவ்வொன்றும், முதன்மைச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் நிரப்பப்படுதல் வேண்டும்.

**நோக்கக்—காரண விளக்கவுரை**

1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 21/1994), ஊராட்சி ஒன்றியங்களும் மாவட்ட ஊராட்சிகளும் நிலப்பகுதியில் அமைந்த தொகுதிகளாக அல்லது சிற்றொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிற்றொகுதியிலும் ஒரே ஓர் உறுப்பினர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியன போன்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் அவ்வாறே உள்ளன. எனினும் கிராம ஊராட்சிகளின் நேர்வில், மேற்சொன்ன சட்டத்தின் 12—ஆம் பிரிவானது கிராம ஊராட்சியின் தனிப்பட்டதொரு சிற்றொகுதியில் இருந்து பல உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வகை செய்கிறது. பல உறுப்பினர்களைக் கொண்ட சிற்றொகுதி என்ற அடிப்படையிலான சிற்றொகுதிகளின் இந்த முறையானது கிராம ஊராட்சிகளில் மட்டுமே இருந்து வருகிறது. இது பல்வேறு இன்னல்களை ஏற்படுத்துகிறது.

2. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தலைமையிலான மூன்றாவது உயர்நிலைக் குழுவானது, கிராம ஊராட்சிகளின் சிற்றொகுதிகள், பரப்பளவு மற்றும் மக்கள் தொகை ஆகிய இரண்டு அடிப்படைகளிலும் பார்த்தால் மிகவும் சிறிய அளவினதாக இருக்கின்றன எனவும், அதனால் பல உறுப்பினர்களைக் கொண்ட சிற்றொகுதி முறையானது நிறைவானதாக இல்லை எனவும் கருத்துரை வழங்கி, கிராம ஊராட்சிகளில் தற்போது இருந்து வருகின்ற முறையான பல உறுப்பினர்களைக் கொண்ட சிற்றொகுதி முறையானது நீக்கப்படுதல் வேண்டும் எனவும், அதற்குப் பதிலாக ஓர் உறுப்பினரைக் கொண்ட சிற்றொகுதி என்ற அடிப்படையிலான சிற்றொகுதிகளால் அவை மாற்றியமைக்கப்படுதல் வேண்டும் எனவும் பரிந்துரை செய்துள்ளது. அரசானது, மேற்சொன்ன குழுவின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு கிராம ஊராட்சியின் ஒவ்வொரு சிற்றொகுதியிலிருந்தும் ஓர் உறுப்பினரை மட்டுமே தேர்ந்தெடுக்கும் வகையில் மேற்சொன்ன சட்டத்தின் 12—ஆம் பிரிவைத் திருத்துவதெனவும் கிராம ஊராட்சிகளின் ஒவ்வொரு சிற்றொகுதியிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போதுள்ள உறுப்பினர்கள் அவர்தம் தற்போதைய பதவிக்கால அளவு முடிவடைவது வரையிலும் உறுப்பினர்களாகத் தொடர்ந்து இருப்பதனை இயல்விப்பதற்கு வகை செய்வதெனவும் மேற்சொன்ன சட்டத்தின் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் அத்தகைய உறுப்பினர்களின் பதவியில் ஏற்படும் காலி இடங்களை நிரப்புவதெனவும் முடிவு செய்துள்ளது.

3. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*துணை முதலமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.